<u>செய்தி வெளியீடு எண்.605</u> <u>நாள்: 24.9.2007</u>

<u>பத்திரிக்கை செய்தி</u>

மாண்புமிகு மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு சுசில்குமார் ஷிண்டே அவர்கள் 24.9.2007 அன்று கூட்டி இருந்த மாநில மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டில், தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் கலந்து கொண்டார். அவருடன் எரிசக்தி துறை மூத்த செயலாளர் திரு சதபதி அவர்களும், மின் வாரியத் தலைவர் திரு உறன்ஸ் ராஜா வர்மா அவர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் 11வது திட்டக் காலத்தில் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ள மின் திட்டங்களை விரைவுபடுத்துவது குறித்தும், மின் உற்பத்தியில் தனியார் முதலீட்டை ஊக்கப்படுத்துவது குறித்தும், வர்த்தக மின் உற்பத்தி திட்டங்களை (Merchant Power Plants) அனுமதிப்பது குறித்தும், நீர் மின் திட்டங்கள் அமைப்பதில் உள்ள இடர்பாடுகள் நீக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் பேசுகையில் தமிழகத்தில் வர்த்தக மின்உற்பத்தி திட்டங்கள் அமைக்க பல முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளதாகவும், சுமார் 30000 மெகாவாட் அளவில் மின்சாரம் தயாரிக்கக் கூடிய தனியார் வர்த்தக மின்உற்பத்தி நிறுவனங்கள் தமிழகத்தில் அமைக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளள்ளதாகவும் அதில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஒப்புதலுடன், தமிழ்நாடு அரசு ஏற்கனவே 6000 மெகாவாட் அளவிற்கு மின்சாரம் தயாரிக்க முன்வந்துள்ள 4 நிறுவனங்களுக்கு ஒப்புதல் தந்துள்ளதாகவும் தெரிவித்தார். இது தவிர, வரும் டிசம்பர் மாதம் முடிவிற்குள் அரசு திட்டமிட்டுளள மின்உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கான ஆணைகளை (Purchase Order) BHEL நிறுவனத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் அவர்கள் கூறியபோது

தமிழகத்தைப் பொருத்தவரையில், தற்போது, துவக்க நிலையில் உள்ள மின்உற்பத்தி திட்டங்களுக்கான கருவிகளை வாங்குவதற்கான ஆணைகளை கொடுப்பதற்கு 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை காலக்கெடுவை நீட்டித் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மேலும் பெல் நிறுவனம், அனைத்து மாநிலங்களுக்கும் மின்உற்பத்தி தளவாடங்களை உற்பத்தி செய்து தரவேண்டியுள்ளதால் காலதாமதம் ஆகின்றது என்றும், தற்போது சைனாவை சேர்ந்த சில நிறுவனங்கள் மிகக் குறைந்த விலையில் தரமான மின் உற்பத்திக் கருவிகளை தர முன்வந்துள்ளதால், அந்நிறுவனங்களிடமிருந்து அவற்றை வாங்குவதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நீர்மின்திட்டங்களைப் பொருத்தவரை காவிரி ஆற்றின் குறுக்கே வரவேண்டியுள்ள நீர்மின்திட்டங்களை காவிரி நீர்ப்பங்கீடு தாவா முடிந்தபின் துவங்கிடவேண்டும் என்று கர்நாடக அரசு கூறி வருகிறது. இத்தாவா முடிவதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும் என்று தெரியவில்லை. அது வரை மிகக் குறைந்த கட்டணத்தில் கிடைக்கக்கூடிய மின்சாரத்தை உற்பத்தி செய்யாமல் இருப்பது தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநில அரசுகளுக்கு பெரும் இழப்பாகும். ஏனவே, இத்தாவா முடியும் வரை காத்திருக்காமல் உடனடியாக மத்திய நீர்மின்உற்பத்தி நிறுவனம் மூலம் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு தயாரிக்கப்படும் மின்சாரத்தை, மத்திய எரிசக்தி துறை அமைச்சகமே இந்த இரண்டு மாநிலங்களுக்கும் சமமான அளவில் பகிர்ந்து வழங்க வேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

*******

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.